நாள்.04.04.2025

**அசல் வழக்கு எண்.109/2022**
**பெயர். கிறிஸ்டின் பால்ராஜ்**

**த.பெ.ஆரோக்கியசாமி**

**<u>பி.வா.சா.1– வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வழக்கு சொத்தின் வடபுறம் என்ன சர்வே எண் என்றால் தெரியாது.அது யாருடைய சொத்து என்றால் என்னுடையது. எனக்கு எப்படி கிடைத்தது என்றால் குடும்ப பாகபிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்டது. என் குடும்பத்திற்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் தங்கராஜ் கணக்குபிள்ளையிடமிருந்து என் அப்பா பரிவர்த்தனை மூலம் வழக்கு சொத்தை வாங்கியுள்ளார். அப்படி வாங்கப்படவில்லை என் அப்பா மற்றும் அவருடைய சகோதரர்கள் பாக பிரிவினை செய்து கொண்டு அதன் மூலம் என் அப்பாவிற்கு கிடைத்த சொத்து என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன பரிவர்த்தனை எப்போது ஏற்பட்டது என்றால் ஞாபகமில்லை. பரிவர்த்தனை பத்திரம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. அதை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பரிவர்த்தனை பத்திரத்தை நான் பார்த்ததும் இல்லை படித்ததும் இல்லை என்றால் சரிதான். அதனால் வழக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு தென்புறமும், வடபுறமும் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

வழக்கு சொத்து எங்கள் குடும்பத்தில் பாக பிரிவினை ஏற்பட்டு 6 வருடங்கள் கழித்து வாதி கடந்த 26.08.2010 அன்று அவருடைய மனைவியின் நகைகளை விற்று அவருடைய சொந்த வருமானத்தில் வாங்கிய தனிப்பட்ட சொத்து என்றால் தவறு. வாதி வாங்கிய கிரைய பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் முழுதாக படிக்கவில்லை. அதில் என்ன வாசகம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 தான் வாதி வாங்கிய கிரைய பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ1 ல் பக்கம் 2ல் "**இதுநாள்வரையில் சர்வ சுதந்திர பாத்தியங்களுடன் அனுபவித்து வருகிற கிரைய சொத்தை பேசி தங்களிடம் ரூ.20000/–க்கு கிரையம் கொடுக்கிறோம்.... இன்று முதல் சர்வ சுதந்திரமாய் அனுபவிக்க வேண்டியது**" என்று உள்ளது என்றால் ஆமாம். ஆனால் அது தவறு. 26.08.2010 பத்திரம் இதுநாள்வரை தவறு என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ஆமாம் அது எனக்கு தெரியாது. என் அண்ணன் வாதி முதன்முதலில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நான்தான் அவருக்கு வழக்கு சொத்தை பொறுத்து வழக்கறிஞ ர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஆமாம். அந்த அறிவிப்பிற்கு பிறகு

நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு பட்டா சிட்டா அடங்கல் அனைத்தும் வாதி பெயரில்தான் உள்ளது என்றால் ஆமாம். மூத்தவர் என்ற முறையில் உள்ளது. மூத்தவர் என்ற முறையில் இல்லை சட்டப்படி அவர் உரிமையாளர் என்பதால்தான் அவர் பெயரில் உள்ளது என்றால் அவர் தவறு செய்துள்ளார். அவர் தவறு செய்தது பொறுத்து நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு விவரம் தெரியாது.

வழக்கு சொத்தை அதன் உரிமையாளரிடமிருந்து நான் கிரையம் வாங்க முயற்சி செய்தேனா என்றால் என் சொத்தை நான் கிரையம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் வாதிதான் எனக்கு ஒதுக்கி கொடுத்தார். வழக்கு சொத்து வாதியால் பாக பிரிவினைக்கு பின்னர் அவரால் வாங்கப்பட்டது என்றால் 2005 பாக பிரிவினை ஆனது. வழக்கு சொத்திற்கு பட்டா கேட்டு மனு கொடுத்தேனா என்றால் இல்லை. பரிவர்த்தனை பத்திரத்தை என்னால் எழுதி வாங்க முடியவில்லை. வழக்கு சொத்தை என் அப்பா பரிவர்த்தனை மூலம் வாங்கவில்லை என்றால் இல்லை. அதற்கு சாட்சி பண்ணைவயல் ராஜாதம்பி. நான் அறிவிப்பு அனுப்பியபோது எனது அப்பா கிரையம் வாங்கிய சொத்து என்று சொல்லிவிட்டு தற்போது என் அப்பா பரிவர்த்தனை மூலம் வாங்கிய சொத்து என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. வழக்கு சொத்தை என் அப்பா கிரையமோ பரிவர்த்தனை மூலமோ வாங்கவில்லை என்றால் அது பொய். வழக்கு சொத்தை வாதி 26.08.2010 முதல் அவர் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் அது பொய். வழக்கு சொத்து வாதிக்கு மட்டும் சொந்தமும், பாத்தியமும், அனுபவமும், உரிமையும் உள்ள சொத்து என்றால் இல்லை. எனது தரப்பில் வழக்கு சொத்தை பொறுத்து எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி வழக்கு போடுவதற்கு முன்பாக நான் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பிவிட்டு அதன்பிறகு நானும் என் மனைவியும் வழக்கு சொத்தை சட்டத்திற்கு புறம்பாக அடைய முயற்சி செய்கிறோம் என்றால் இல்லை.

எனது நிருபண வாக்குமூலத்தில் பாரா 4ல் "எங்களது தாயாரான அருளாயிக்கு கிடைக்கபெற்று அதன்பிறகு நானும் வாதியும் அனுபவித்து கொள்வது" என்று முடிவுசெய்யப்பட்டதாக சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. அது உண்மைதான். வழக்கு சொத்திற்கு வடபுறம், தென்புறம் எனக்கு சொந்தமான சொத்து என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித பாதை புழக்கம் கிடையாது என்றால் வாதி

இடத்தில் எனக்கு பாதை உள்ளது. என் அப்பா சொல்லிவிட்டுதான் பங்கு பிரித்தார். வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித பாத்தியமும் அனுபவமும் இல்லை என்பதை தெரிந்து கொண்டு வழக்கை உள்நோக்கத்தோடு நடத்தி வருகிறேன் என்றால் இல்லை. நான் பொய் கட்சி செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya, B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.